(ஆ) முதலமைச்சர் சினிமாவில் நடிக்க பதவி விலக இருப்பது குறித்து

திரு நா. சுந்தரராஜ் ; முதலமைச்சர் மட்டும் ராஜிநாமாச் செய்யப் போகிறாரா? இல்லையென்றால் சர்க்காரைக் கலைத்து விட்டுப் போகப் போகிறாரா? அவர் ராஜிநாமாச் செய்தால் எல்லோரும் போன மாதிரிதான்;....

நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு சினிமாவில் நடிக்கப் போவதாகவும், அவர் நடிக்க இருக்கிற படம் தீபாவளியன்று திரையிடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது ஒழுங்குப் பிரச்சினைக்கு உகந்தது அல்ல.

திரு. சி. ஆறுமுகம் : அவரே பேசியிருக்கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் அவையில் இருக்கும்போது இந்தப் பிரச்சினையை எழுப்பினால் நலமாக இருக்கும்,

திரு. துரை முத்துசாமி : பத்திரிகையில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்று கூறி அதைப் பிரச்சினையாகக் கொண்டு இங்கு ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்புவது முறையானது அல்ல. இந்த அவையின் மரபுக்கும் அது உகந்தது அல்ல.

5. அறிவிப்புகள்

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1) வது விதியின்கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. பொ. சிகாமணி
3. திரு. என். கிட்டப்பா
4. திரு. ர. ஜெபமணி

ஆ. நாகப்பட்டினம் தொகுதி உறுப்பினர் பதவி விலகல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாரூர் (செட்யூல்டு வகுப்பு) சட்டமன்றப் பேரவை தொகுதி உறுப்பினர் திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் நாடாளுமன்றத்திற்கு (ஏழாவது